[14th March 1963

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கான கட்டிடங்கள் (மாயூரம்)

*கேள்வி 229.—**திரு. எஸ். முருகையன்** (திரு. கோ. சி. மணி சார்பாக): கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரம் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் வசதி இல்லாத வாடகைக் கட்டிடத்தில் நடைபெற்று வருவதை மாற்றி அரசாங்கமே சொந்தக் கட்டிடம் கட்ட உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The proposal has been deferred in view of the National Emergency.

Drug Control Administration

* 230 *Q.*—SRI V. R. NEDUNCHEZHIAN (on behalf of **SRI K. A. MATHIALAGAN**): Will the Hon. the Minister for Public Health be pleased to state the measures taken to tighten the drug control administration with a view to prevent the sale of spurious and sub-standard drugs in the market?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: A separate Assistant State Drugs Controller has been appointed to attend to drug control work in the State. The Drugs Inspectors have been instructed to be more alert and inspect the sales and manufacturing concerns in their area more frequently. Random samples of drugs are taken and sent for analysis to check up their quality. Manufacturers are allowed to release the drugs only after the records of manufacture and testing are scrutinised by the Inspector. All the records about the manufacture, sale, etc., are scrutinised by Drug Inspectors during their inspection of the concerns. The Government Analyst in charge of drugs has been instructed to deal with analysis of drugs samples sent to him without avoidable delay. The senior Drugs Inspectors have been sent to Bombay and Baroda to study the working of drug control administration in those States so as to reorganise the set up in this State on those lines. An Anti-Spurious Drugs Committee has been constituted and is functioning in this State for the past few years to advise Government on matters connected with the prevention of the manufacture and sale of spurious and sub-standard drugs and wherever possible their recommendations are accepted and implemented. To give an incentive to the Drugs Inspectors to discharge their duties efficiently, their scale of pay has been increased, special posts have been created and conveyance advances for the purchase of motor cycles, scooters etc., have been allowed.

திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போலி மருந்துகளைத் தயாரித்து தொழிற்சாலைகள் தமிழக மாநிலத்தில் ஏதாவது வலுக்கட்டாயமாக மூடப்பட்டிருக்கின்றதா ?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : தமிழ் மாகாணத்தில் இல்லை. நம் மாகாணத்தை விட்டு மற்ற மாகாணங்களிலிருந்துதான் வருகின்றன

14th March 1963]

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : போலி சாமான்கள் செய்கிறவர்களை கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்க இப்போது இருக்கிற சட்டம் இடம் கொடுக்கிறதா ?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம் : சட்டத்திலே தண்டிப்பதற்கு விதி இருக்கிறது. ஆனால் குற்றம் செய்கிறவர்களைக் கண்டுபிடித்து, தீர விசாரித்து ஆலோசனை செய்த பிறகுதான் இம்ப்ளிமெண்ட் செய்ய முடியும்.

திரு. முனு ஆதி : தலைவர் அவர்களே, இந்த மருந்துகளில் கால்சியம் மருந்தாக விற்கக் கூடியதில் இரண்டு வகையாக இருக்கின்றன. ஒன்று, திருவொற்றியூரிலிருந்து தயாரித்து விற்கப்படும் கால்சியத்தை ஊசியில் ஏற்றி உடலில் செலுத்தும்போது உடம்பெல்லாம் கொதிப்பு ஏற்பட்டு ஹார்ட்டையே பாதிக்கக் கூடிய நிலை இருக்கிறது. அதே நேரத்தில் கல்கத்தாவிலிருந்து தயாரிக்கப்பட்டு வருகிற கால்சியம் நன்றாக இருக்கிறது. ஏன் இப்படி வித்தியாசமான மருந்துகளை உபயோகிக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கால்சியத்தை ப்ரோட்யூஸ் பண்ணுகிற மானுஃபாக்சரர்ஸ்களில்தான் வித்தியாசமே தவிர, வரக்கூடிய கால்சியத்தில் வித்தியாசமில்லை. கால்சியம் இன்ஜெக்ஷன் கொடுத்தால் ரீ-ஆக்ஷன் இருக்கத்தான் செய்யும். அந்த ரீ-ஆக்ஷனில் கொஞ்சம் அனல் தான் காட்டும்.

போக்குவரத்து விபத்துக்கள்

*கேள்வி 231.—**திரு. முனு ஆதி:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தனிப்பட்டவர்களின் கார்களில் பொருத்தப்பட்டிருக்கும் வானொலி பெட்டிகளினால், போக்குவரத்து விபத்துகள் அதிகமாக ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் அறியுமா ?

(ஆ) ஆம், என்றால் அதைத் தடை செய்ய உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) Does not arise.

திரு. முனு ஆதி : ஸார், இப்போது பஸ்களிலே அப்படிப்பட்ட ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன என்று உணர்ந்து அதைத் தடை செய்திருக்கிறார்கள். அதே போன்று இதையும் தடை செய்தால் அதிகமான ஆக்ஸிடெண்டுகள் குறைக்கப்படும். அதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ்ஸிலே இவ்வாறு போடக்கூடாது என்று ஆலோசனைக் குழுவில்கூட சிபாரிசு செய்யப்பட்டது. பஸ்ஸிலே போடுவது வேறு விஷயம். தனிப்பட்டவர்கள் ஏதோ ஒரு சில கார்களில் வைத்திருக்கிறார்கள். அதனால் விபத்து ஏதும் ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால் அதைத் தடுக்க உத்தேசம் இல்லை.

திரு. ம. கமலநாதன் : பஸ்களிலே இந்த ரேடியோ வைப்பதால் ட்ரைவருடைய கவனம் கவரப்பட்டு ஆக்ஸிடெண்ட் ஆகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் பஸ் போகும்போது ரோடுகளில் இருக்கிற ஹோட்டல்களிலே இந்த ரேடியோவை வைத்திருப்பதினால் இந்த ட்ரைவருடைய கவனம் கவரப்பட்டு, அதன்காரணமாக ஆக்ஸிடெண்ட் வராதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஸ் போகிறது என்றால் அதற்காக ஊரையெல்லாம் கட்டுப்படுத்த முடியாது. பஸ் ஓட்டுகிறவர்கள் ஜாக்கிரதையாகத்தான் ஓட்டவேண்டும்.